# மகாவம்சம் காட்டும் கொடூரமான அரசி அனுலாதேவி

## Anula Devi, the cruel queen of the Mahavamsa

எஸ்.கே.சிவகணேசன்
சிரேஸ்ரவிரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
கிழக்குபல்கலைக்கழகம்,இலங்கை

அ..பகீரதன்
பதிவாளர்
கிழக்குபல்கலைக்கழகம்,இலங்கை

**ஆய்வுச்சுருக்கம்**

இராசரட்டை அரசியல் மையம் சுமார் 1300 வருடங்கள் நிலைத்து இருந்தது. அத்தலைநகர் நிலைத்து இருந்த காலப்பகுதியில் அனுலா, சீவலி, அனுலாதேவி, சோமாதேவி, கவந்ததீச மன்னனின் ராணி விகாரமாதேவி, ருகுணு ஆட்சியாளன் ஸ்ரீபல்லவன் ராணி சுகலா, ராணி லீலாவதி என பல பெண்கள் ஆட்சியாளர்களாக இருந்துள்ளனர். இவர்கள் ஆட்சியாளர்களாகவும், இராணுவ ஆலோசகர்களாகவும் இருந்துள்ளனர். இந்த வகையில் இராஜரட்டை- அனுராதபுர ஆட்சியாளராக இருந்த வக்கிர செயற்பாடுகள் கொண்ட, மகாவம்சம் காட்டும் அனுலாதேவி பற்றி நோக்கப்பட்டுள்ளது..

இலங்கைவரலாற்றைக்ஆதிமுதல்கூறும்மகாவம்சக்குறிப்புகளில் இரண்டு அனுலாக்கள் பற்றிய செய்திகள்காணப்படுகின்றன. ஒன்று தேவனம்பிய தீசனின் தம்பி, மகாநாகன் மனைவி அனுலா. மற்றவள் அனுலா அல்லது அனுலாதேவி. இவள் பல திருமணங்களை முடித்து, அவர்களைமன்னர்களாக்கி, கொலை செய்து கிமு. 45 இல் அனுராதபுர ஆட்சியில் அமர்ந்தவள். இறுதியில்குடாக்கன்னதிஸ்ஸஎன்றஅரசனினால்தீயிட்டுக்கொளுத்திக்கொல்லப்பட்டாள்.இவ்வரசிபற்றிமகாவம்சம்வித்தியாசமானகுறிப்புக்களைக்காட்டிநிற்கின்றது.அக்குறிப்புகள்பற்றியதானஆய்வேஇது.

**கலைச்சொற்கள்** :தலைநகர், ராணி, ஜதகக்கதைகள், மகாவம்சம், தொல்பொருள்

**அறிமுகம்**

தென்னாசியாவில் இலங்கை நீண்ட கால வரலாற்று பாரம்பரியத்தைக் கொண்டதொரு நாடு. தனித்துவமான அரசியல், பொருளாதாரம், சமூக பண்பாட்டு அம்சங்களைக்கொண்டுள்ளது. தனித்துவமான அரசியல் எழுச்சியையும்

வளர்ச்சியையும் வரலாற்றில் பதிவு செய்திருக்கின்றது. இந்த வகையில் ஆண் ஆட்சியாளர்களைப்போன்று விசித்திரமான பெண் ஆட்சியாளர்கள் பற்றியும் மகாவம்ச நூல் மற்றும் பரம்பரைக்கதைகள் எடுத்தியம்புகின்றன. விஜயன் முதல் மாகோன் வரையான சுமார் 1815 வருடகால இராசரட்டை அரசியல் வரலாற்றில் 145 ஆட்சியாளர்;கள் பற்றிய செய்திகள் மகாவம்சத்தில் காட்டப்பட்டுள்ளது. அவ்வாட்சியாளர்களுள் 4 பேர் மாத்திரமே பெண் ஆட்சியாளர்கள் (Obeesekara,1911:48,176, Geiger,1912 :Ch 33,34). அனுராதபுர கால அரசியலில் அனுலா,சீவலி மற்றும் பொலனறுவைக்கால அரசியலில் லீலாவதி, கல்யாணவதி ஆகியோரே பெண் ஆட்சியாளர்கள். இலங்கை வரலாற்று செய்திகளில் பல பெண்களைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. ராணி என்ற வகையில் நான்கு பெண்கள் பற்றிய செய்திகள் பதிவிடப்பட்டுள்ளன..

உலக வரலாற்றில் சில நாடுகளைப் போல் அல்லாமல், புராதன இலங்கையில், பெண்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற அனுமதிக்கப்பட்டனர். ஆனால் மரபுப்படி, அரசாட்சியானது தந்தை, மூத்த மகன் அல்லது மூத்த சகோதரனிடமிருந்து இளைய சகோதரன் என்ற மரபு படி ஆட்சியுரிமை கைமாற்றப்பட்டது. இந்த தனித்துவமான மரபு படி பெண்கள் ஆட்சியாளராக வரக்கூடிய வழக்காறு அப்போது காணப்படவில்லை. இந்த மரபினை மீறி ராணியானவள்தான் அனுலா. அதாவது இவள் தனது கணவன் சோர நாகனைக் கொலை செய்து விட்டு தானே ராணியாக இருந்து பலரை மன்னராக்கி அதிகாரத்தில் இருந்தவள்.

மற்றொரு விடயம் மகாவம்சம் அனுலா என்ற பெயரில் இரண்டு பெண்களைப்பற்றிய செய்திகளைத்தருகின்றது. கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தேவனம்பிய தீசனின் மச்சாள் அனுலா. இவளோ இலங்கையின் முதல் பிக்குனி பெண் (Geiger,1912 :Ch 19,65,133). இங்கு ஆராய்படுவது இவளல்ல. கி.மு. முதலாம் நூற்றாண்டில் அனுராதபுர அரசியாகவிருந்த அனுலா பற்றியதாகும் (Geiger,1912 :Ch 34). இவள் தகாத ஆண்தொடர்புகளை ஏற்படுத்தி, அவர்களை தன் துணைவராக்கி, மன்னராக்கி,தொடர்ச்சியான தகாத உறவுகளால் பின்னர் அவர்களை கொலை செய்தாள் (Geiger,1912 :Ch 34). வரலாற்று நூலானமகாவம்சத்தில் ஒரு வித்தியாசமான, வன்ம பெண் பாத்திரமாக படைக்கப்பட்டுள்ளாள். மகாவம்சத்தை தொகுத்த மகாநாம தேரர் பல அரசியல் விவகாரங்களை தமிழருக்கும் பௌத்த சிங்களவருக்கும் இடையிலான வன்மமாக திரிபு காட்டியுள்ளார். அப்படியிருக்கையில் ராணி அனுலா பற்றிய கொடூரமான வன்ம செய்திகளை ஏன் மறைக்காமல் விட்டு வைத்தார் என்பது விளங்கவில்லை. அவளால் கொலை செய்யப்பட்ட கணவன்மார்களின்(மன்னர்கள்) பட்டியல் மேல்வருமாறு :(Geiger,1912 : Ch 34 :)

| மன்னர்களின் பெயர்கள் | ஆட்சிக் காலம் | குறிப்பு |
|---|---|---|
| 1. சோர(கோர) நாக | கிமு 62 - 50 | வட்டகாமிஅபயவின் 2வதுமகன் |
| 2. குடாதிஸ்ஸ | கிமு 50 - 47 | மன்னன்மகாசூலியின்மகன். |


© 2025, IRJTSR

| | | |
|---|---|---|
| 3. சிவியா | 14 மாதங்கள் | அரண்மனைக்காவலாளி |
| 4. வடுகன் | 13 மாதங்கள் | அரண்மணைதச்சன் |
| 5. தீசன் | 6 மாதங்கள் | அரண்மனைவிறகுவெட்டி |
| 5. நீலியா | 14 மாதங்கள் | அரண்மனைபுரோகிதன் |

**அரசியல் பலவீனம்**

மகாவம்ச தகவல்களின்படி கி.மு. முதலாம் நூற்றாண்டு காலத்தில் அனுராதபுர அரசியல் நிர்வாகம் பலவீனமாகவும் ஆதிக்க போட்டிகள் கொண்டதாகவும் இருந்தது. பலர் ஆட்சியைக்கைப்பற்றிக் கொள்ள சூழ்ச்சிகள், துரோகங்கள், பழிவாங்கல்கள் போன்ற செயல்களை மேற்கொண்டனர். அதனால் அனுராதபுர இராச்சியத்தினுள் அரசியல் பலவீனமும் அமைதியின்மையும் நிலைகொண்டிருந்தது.

கி.மு. முதலாம் நூற்றாண்டில் அனுராதபுர இராஜதானி விஜயனின் பரம்பரையைச்சேர்ந்த சோர நாகன்(மகாநாக) என்பவரால் ஆட்சி செய்யப்பட்டது (கிமு 62-50). இவன் வட்டகாமி அபயவின் மகன்( Geiger,1912 : 239). வட்டகாமினியின் பின் ஆட்சிக்கு வந்த மாகாகுலி மகாதிஸ்ஸ (கி.மு.76 - 62) அதிகாரத்தில் இருந்த காலப்பகுதியில் சோரநாக ஒதுக்கப்பட்டிருந்தான் என மகாவம்சக் குறிப்புகளில் வருகின்றது(Geiger,1912 :Ch 34:11, 238). இந்த வகையில் மகாகுலி இறந்ததும் சோரநாகன் அனுராதபுர ஆட்சியாளரானான். இவன் பௌத்த விகாரைகளை இடித்து பௌத்தசமயத்தக்கு எதிராக செயற்பட்டான் என மகாவம்சம் சுட்டுகின்றது (Geiger,1912, Ch 34:12,239). அதனால் அவனிடமிருந்து இராச்சியத்தை மீட்டெடுக்க வேண்டியிருந்தது. சுமார் 12 வருடங்கள் ஆட்சியாளனாக இருந்த சோரநாகனை, அவனது ராணி அனுலா நஞ்சு கொடுத்துக்கொன்றாள் (Geiger,1912, Ch 34:14,239). இதற்கான காரணங்கள் என்னவென்று அறியமுடியவில்லை. ஆயினும் இவள் மகாகுலி மகாதிஸ்ஸவின் மகன் குடாதிஸ்ஸ என்ற அரண்மனை வாயிற்காவலனுடன் காமத்தொடர்புகளை வைத்திருந்தாள் என்ற தகவல்களையும் மகாவம்சம் காட்டுகின்றது (Blaze,2004:41-42>Geiger,1912,Ch 34 :18, 239). அதுவே கொலைக்கு காரணமென மகாவம்ம் காட்டுகின்றது.

அனுராதபுரஇராச்சியத்தில்அனுலாகொண்டிருந்தஅரசியல்அதிகாரத்தைப்பயன்படுத்திதன்னுடையகாதலன்குடாதிஸ்சாவைதிருமணம்செய்துஅனுராதபுரஆட்சியில்அமர்த்தினாள்(கி.மு.50-47). இவன்அனுலாவின்கட்டுப்பாட்டில்ஆட்சிசெய்தான். சமகாலத்தில்தனதுஅரண்மனையின்மற்றொருகாவலாளிசிவியா (சிவன்) என்பவன்மீதுகாமத்தொடருபுண்டாள். இவனைதமிழன்என்றேமகாவம்சம்சுட்டுகின்றது(Geiger,1912,Ch 34 :18, 239). அதனால்கணவன்குடாதிஸ்ஸாவையும்நஞ்சுகொடுத்துக்கொன்றாள். பின்சிவியாவைஅனுராதபுரமன்னராக்கினாள். சுமார் 14மாதங்களின்பின்வடுகன்என்றவிறகுவெட்டியோடுகாமத்தொடர்புகொண்டு, சிவியாவையும்; நஞ்சுகொடுத்துகொன்றாள்(Geiger,1912, Ch 34 :19, 239).


© 2025, IRJTSR

பின்னர்தமிழனானவடுகன் 13மாதங்கள்அனுராதபுரஅரசனாகஇருந்தான்எனமகாவம்சம்குறிப்புகளைக்காட்டுகின்றது

அரண்மனை விறகுவெட்டியான தீசன் என்பவனுடன் காமத்தொடர்பு கொண்டாள். அதன் காரணமாக தனது நான்காவது கணவன் வடுகனுக்கும் உணவில் நஞ்சு கலந்த கொடுத்துக் கொன்றாள். அதன் பின்னர் தீசன் 13 மாதங்கள் அனராதபுர மன்னனாகவிருந்தான் (Geiger,1912 Ch34:22, 239). அரண்மனை புரோகிதரான நீலியான் என்ற பிராமணனோடு ஏற்படுத்திக் கொண்ட காமத்தொடர்பு காரணமாக தீசனுக்கும் நஞ்சு கொடுத்து கொலை செய்துவிட்டு, நீலியானை அனுராதபுர மன்னனாக்கினாள் Geiger,1912, Ch 34:24, 239).. மகாவம்ச தகவல்களின்படி இப்பிராமணன் 6 மாதங்கள் மன்னனாக இருந்தான். அவனையும் நஞ்சு கொடுத்து கொன்று விட்டு, பின்னர் அனுலாவே ராணியாக நான்கு மாதங்கள் செயல்பட்டாள். இவள் அரண்மனை காவலர்கள் 32 பேருடன் காமத்தொடர்பு வைத்திருந்தாள் என மகாவம்சம் கணக்கிட்டுகாட்டியுள்ளது(Geiger,1912,Ch 34 :28,31, 239 -240).

**மன்னன் குடாக்கண்ணதீச** :

இவன் மாகாசூலி மகாதிஸ்ஸவின் இரண்டாவது மகன். சோரநாகன் ஆட்சிக்காலம் முதல் அனுலாவிற்கு அஞ்சி, தீட்சை பெற்று மறைவு வாழ்க்கை வாழ்ந்தவன். தற்போது படைகளை திரட்டி கொண்டு வந்து அனுராதபுர அரசைக்கைப்பற்றினான் (Geiger,1912 : 240). பழைய அரண்மனையினுள் வைத்து அனுலாவை எரித்து கொலை செய்தான். பின்னர் புதிய அரண்மனையை அவன் அமைத்தான். இவன்; 22 வருடங்கள் அனுராதபுர மன்னனாகவிருந்தான் என மகாவம்சம் விபரிக்கின்றது(Geiger,1912,Ch 34 :28,31, 240).

ராணி அனுலா ஏன் தனது கணவன்மார்களை இப்படி கொலை செய்தார் ?அதிகாரத்திற்காவா ? இல்லை காம வெறிகாரணமாகவா? இந்தக் கேள்விகளுக்கு மகாவம்சமே பதில் தந்திருக்கின்றது. உண்மையில் வட்ட காமின் அபயவின் பின் ஆட்சிக்கு வரவேண்டியவன் சோர நாகன். அப்படி இருந்தும் அவன் பறக்கணிக்கப்பட்டு மகாசூலி மகாதிஸ்ஸ (கி.76-62) அனுராதபுர மன்னராக்கப்பட்டான். எப்படி ஆட்சிக்கு வந்தான் என்பது தொடர்பிலோ, ஏன் சோர நாக புறக்கணிக்கப்பட்டான் என்பது பற்றியோ தகவல்கள் ஏதும் மாகாவம்சத்தில் காட்டப்படடிருக்கவில்லை. ஆனால் “மகாசூலனுடைய ஆட்சிக்காலத்தில் வத்தனாமினுடைய மகன் சோர நாதன் என்பவன் ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து வந்தான்” எனக்குறிப்பிடப்பட்டுள்ளது(Geiger,1912,Ch 34 :11,239). இந்த செய்தி சோரநாதன் பறக்கணிக்கப்பட்டு மகாசூலி மகாதிஸ்ஸ ஆட்சிக்கு வந்ததை காட்டுகின்றது.

சோர நாக ஆட்சிக்கு வந்த பின் நடந்த பல சமவங்களை மகாவம்சம் எடுத்தியம்புகின்றது. “கிளர்ச்சிககாரனாக இருந்த போது தனக்கு புகலிடம்

கிடைக்காத (கொடுக்காத) 18 விஹாரங்களை இந்த மூடன் அழித்து விட்டான்.......” என்று கூறப்பட்டுள்ளது(Geiger,1912,Ch 34 :13,239). அப்போ இவன் பௌத்த சமயத்துக்கெதிராக செயற்பட்டான் என்பதும் அதற்கான காரணமும் சொல்லப்பட்டுள்ளது. உண்மையில்சோரநாகபௌத்தசமயத்துக்குஎதிரானவன்அல்ல. தனதுமறைவுவாழ்வின்போதுதனக்குஅடைக்கலம்கொடுக்காதவிகாரைகளையேஅவன்உடைத்தான். தனக்குஅதிகாரம்கிடைத்தபோதுஅந்தவிகாரைகள்மீதுவஞ்சம்தீர்த்தான்என்பதுதெளிவானது.ஆனால் இங்கு ஒருவிடயம் நோக்கத்தக்கது. அவனது மனைவி அவனுக்கு விஷம் கொடுத்து கொலை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது(Geiger,1912,Ch 34 :14,239). இவன் பௌத்த மதத்திற்கு எதிராக செயற்பட்டதற்காக ராணியால் கொல்லப்பட்டானா? இல்லை. ஆனால் மகாவம்ச ஆசிரியர் அதனைக் காரணமாக காட்ட விளைந்தாலும் போதும் ராணியின் பிற்பட்ட செயற்பாடுகள் அவளது காமத்தொடர்பின் கொடூர செயல்களை, பாதகத்தை, கொலைகளை எடுத்துக்காட்டுகின்றன. சோர “நாகனின் மனைவியான கொடியவள் அனுலா அரண்மனைக்காவலன் ஒருவனிடம் கொண்ட காதலால் தன் கணவனுக்கு விஷமிட்டுக் கொன்றாள்” என அவரே குறிப்பிட்டுள்ளார்(Geiger,1912,Ch 34 :239-240).

இது ஒருபுறமிருக்க சோர நாகனின் கொலையின் பின் மகாசூலியின் இரண்டாவது மகன் தீச (குடா திஸ்ஸ) மன்னனாக பொறுப்பேற்றுக் கொள்கின்றான். சோர நாக கொலை செய்யப்பட்ட அதே காரணத்திற்காகவே அவனுக்கு அடுத்ததாக மன்னனாக இருந்த குடா திஸ்ஸவும் அனுலாவினால் நஞ்சு கொடுத்து கொல்லப்பட்டான் (Geiger,1912,Ch 34 :17,239). இந்த இரண்டாவது கொலைக்கும் அனுலாவின் காமத்தொடர்பே காரணமாயிற்று என மகாவம்ச ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். குடாதிஸ்ஸவின் கொலையைத் தொடர்ந்து அரண்மனை தலைமைக் காவலனாக இருந்த சிவியா (சிவன்) என்பவன் அனுலாவினால் மன்னனாக்கப்பட்டான்(Geiger,1912,Ch 34 :18,239). பின் வடுகன் என்ற அரண்மனை தச்சன் என்பனோடு கொண்ட தவறான தொடர்பினால், இவனும் முன்னையவர்கள் போல் உணவில் நஞ்சு கொடுத்து அனுலாவினால் கொல்லப்பட்டான்.

சிவியாவின்கொலையின்பின்தமிழனானவடுகன்என்றஅரண்மனைதச்சன்மன்னனாக்கப்பட்டான். பின்னர்தீசஎன்றவிறகுவெட்டியோடுஏற்பட்டகாதல்தொடர்பால்வடுகனையும்கொன்றாள் (Geiger,1912,Ch 34 :22,239).காலப்போக்கில்அரண்மனைபுரோகிதன்நீலியாஎன்பவனோடுகொண்டகாதலால்தீசனையும்கொன்றாள். இதன்பின்னர்நீலியாவையும்உணவில்விஷமிட்டுக்கொன்றுவிட்டுதானேஆட்சியாளானாகசெயற்பட்டாள்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2025, IRJTSR

மகாவம்சத்தில்வரும்மற்றொருதகவல்நோக்கத்தக்கது. 'அரண்மனைக்காவலர்கள் 32
பேருடன்தன்இஸ்டம்போல்இன்பம்அனுபவித்துக்கொண்டிருந்தஅனுலாநீலியனையும்விஷமிட்டுக்கொன்றுவிட்டுதானேநான்குமாதககாலம்ஆட்சிசெய்தாள்(Geiger,1912,Ch 34 :14,239)இக்குறிப்புஅவளின்தவறானகாமத்தொடர்புகள்தான்தனதுகணவன்மார்களின் கொலைகளுக்குகாரணமாயினவேதவிரவேறுஏதும்காரணமாகஇருக்கமுடியாதுஎனத் தோன்றுகின்றது.

கிமு 47-42 வரைஅனுராதபுரஆட்சியாளராகஇருந்தஅனுலாஅல்லதுஅனுலாதேவிதகாதஉறவை பேணி, அவர்களைதனதுகணவன்ஆக்கி, பின்னர்மன்னராக்கிதொடர்ச்சியாகஒரெபாணியில்கொலைசெய்தபெண்ஆட்சியாளராகமகாவம்சம்காட்டியுள்ளது. ஆனால்இவள்கொடூரமானஆட்சியாளராககாணப்பட்டாலும்அனுராதபுரஇராச்சியத்தைஆட்சிசெய்தஆசியாவின்முதல்ராணிஎன்றபெருமையைக்கொண்டவள்எனவரலாற்றாசிரியர்கள்எடுத்துக்காடடியுள்ளனர். அனுலாஇந்தக்கொலைகளைச்செய்ததுஅதிகாரஆசையால்அல்லமாறாகஎல்லைதாண்டியகாமஆசையால்என்பதுதெளிவாகின்றது. மகாவம்சதகவல்களின்படிஅனுலாஎல்லாக்கொலைகளையும்ஒரேவிதமாகத்மேற்கொண்டாள். அதாவதுஅவள்காமத்தொடர்புகளைஏற்படுத்தி, பின்னர்அவர்களைத்திருமணம்செய்து, அடுத்தடுத்தஅவள்ஏற்படுத்திக்கொண்ட, தவறானகாமத்தொடர்புகளால்கணவன்மார்கள்உள்ளிட்டபலரைதொடர்ச்சியானகொலைசெய்தாள்;.இவளதுஅதிகாரஆட்டம்அனுராதபுரஇராச்சியத்தில்சுமார் 17 வருடங்கள் (கி.மு.76 -கி.மு.42 வரை) கேள்விக்கிடமின்றிதொடர்ந்தது. ஒருபக்கம்காமக்கொடூரியாகவும், திட்டமிட்டகொலைகாரியாகவும்காணப்பட்டஅதேவேளைமறுபக்கம்இலங்கைவரலாற்றில்தைரியமானஆட்சியாளராகசெயற்பட்டாவள்என்பதும்மறுக்கமுடியாதது.

**உசாத்துணை :**

[1] இந்திரபாலா, க.,2006, இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு,
[2] குமரன் புத்தக இல்லம், சென்னை.
[3] சங்கரன்.எஸ்., 1962, (மொழிபெயர்ப்பு),மகாவம்சம், மல்லிகை வெளியீடு,சென்னை.
[4] Blaze, L. E. (2004). *History of Ceylon*. Asian Educational Services.
[5] Donald Obeyesekere.,1911, Outline of Ceylon History, Colombo.
[6] Wilhelm Geiger., 1912, The Mahavansa,Oxford University Press, London